இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 83 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 16 – திங்கட்கிழமை 02 நவம்பர் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:85 - Issue 83 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 16 - Monday 02 November 2026 - Madurai 8 Pages ₹ 5.00



கழகப் பொதுச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் துரைமுருகன் – சாந்தகுமாரி துரைமுருகன் ஆகியோரின் பெயர்த்தியும் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. – சங்கீதா கதிர் ஆனந்த் ஆகியோரின் புதல்வியுமான செந்தாமரைக்கும், திட்டக் குடி ரவிகண்ணன் – தீபா ரவி ஆகியோரின் புதல்வர் தீபக் ரவிக்கும் மணவிழா நேற்று சென்னை ஈ.சி.ஆர். சாலையில் அமைந்துள்ள ஆர்.கே.கன்வென்சன் சென்டரில் நடைபெற்றது. இம்மணவிழாவை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்திவைத்து மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி.துர்கா ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச் செயலாளர்கள் க.பொன்முடி, கனிமொழி ராஜாத்தி கருணாநிதி, கவிப்பேரரசு வைரமுத்து,சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு, முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, ஆர்.காந்தி, செஞ்சி மஸ்தான், சி.வி.கணேசன், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத் ரட்சகன் எம்.பி., வி.ஐ.டி.பல்கலைக் கழக வேந்தர் ஜி.விசுவநாதன், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் உள்ளனர்.

எதிராளிகளைக்கூட வியக்க வைக்கும் ஆற்றல் படைத்த பேச்சாளர் - சிறந்த நிர்வாகி !

தலைவர் கலைஞர் வளர்த்தெடுத்த மாவீரர் அண்ணன் துரைமுருகன் !

இல்ல மணவிழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம் !

சென்னை, நவ.2-

கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களின் இல்ல மண விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மணமக்களை வாழ்த்தி உரையாற்றும் போது, "எதிராளிகளைக்கூட வியக்க வைக்கும் ஆற்றல் படைத்தவர், தலைவர் கலைஞர் வளர்த்தெடுத்த மாவீரர் அண்ணன் துரைமுருகன் அவர்கள்" என்று புகழாரம் சூட்டினார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (01.11.2026), கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களின் இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

இன்று தமிழ்நாட்டில் ஒரு மூத்த தலைவர்களில் ஒருவராக விளங்கிக் கொண்டிருப்பவர் அண்ணன் துரைமுருகன் அவர்கள். நம்முடைய கழகத்தின் பொதுச்செயலாளராக பொறுப்பேற்று பணியாற்றிக் கொண்டிருக்கும் நம்முடைய அருமை அண்ணன் துரைமுருகன் அவர்களின் பேத்தியும், நாடாளுமன்ற உறுப்பினர் தம்பி கதிர் ஆனந்த் – சங்கீதா இணையரின் அருமை மகள் செந்தாமரைக்கும், திட்டக்குடி ரவி கண்ணன் – தீபா ரவி தம்பதியின் அருமை மகன் தீபக் ரவி அவர்களுக்கும் மணவிழா நிகழ்ச்சி நடந்தேறியிருக்கிறது.

உணர்ச்சியோடு நகைச்சுவை கலந்து உரையாற்றுவார்!

இந்த மணவிழா நிகழ்ச்சிக்கு வருகை தந்து வாழ்த்தும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. அந்த வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன். காரணம், கழகத் தலைவராக மட்டும் நான் வந்து வாழ்த்தவில்லை; அண்ணன் துரைமுருகன் அவர்களின் குடும்பத்தில் நானும் ஒருவன் என்ற உரிமையின், உறவின் அடிப்படையில் நான் வாழ்த்



துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

எத்தனையோ அரசியல் தலைவர்களை பார்த்தவர்; எத்தனையோ அரசியல் தலைவர்களிடத்தில் பழகியவர்; எத்தனையோ தேர்தல் களத்திலும் ஈடுபட்டவர்; அவ்வாறு ஈடுபடுகிற நேரத்தில் எத்தனையோ தோல்விகளை, வெற்றிகளை சந்தித்தவர் அண்ணன் துரைமுருகன் அவர்கள்.

அனைத்து விவரங்களையும் விரல் நுனியில் வைத்திருப்பவர்!

இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், எத்தனையோ சட்டமன்ற விவாதங்களில் பங்கேற்று அழுத்தமாக ஆணித்தரமாக உரையாற்றியிருப்பவர் அண்ணன் துரைமுருகன் அவர்கள். எதிராளிகளைக் கூட வியக்க வைக்கும் வகையில் பேச்சாற்றல் அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கு உண்டு. சிறந்த நிர்வாகியாகவும் உணர்ச்சியோடு பேசக் கூடியவராக மட்டுமல்ல, நகைச்சுவை கலந்த அந்த உரையை கண்டவர்கள் நாம். அறிவுப்பூர்வமான புள்ளி விவரங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் அண்ணன் துரைமுருகன் அவர்கள்.

அண்ணன் துரைமுருகன் அவர்களின் செயலைப் பற்றி நான் சொல்ல வேண்டும் என்றால், ஏதாவது ஒரு விஷயத்தை பற்றி நாம் அவரிடத்தில் கேட்டால், அந்த விஷயத்தோடு நிற்காமல், அதன் வரலாறு; அந்த விஷயம் எங்கு நடந்தது; எந்த ஊரில் நடந்தது; எந்த தெருவில் நடந்தது; எந்த வீட்டில் நடந்தது; யார் யார் அதில் பங்கேற்றார்கள்? என்பதை மடைதிறந்த வெள்ளம் போல அனைத்தையும் விரல் நுனியில் வைத்திருப்பதைப் போல எல்லாவற்றையும் பேசும் ஆற்றலைப் பெற்றவர் அண்ணன் துரைமுருகன் அவர்கள்.

சட்டமன்றத்தை பொறுத்தவரைக்கும், இவரை எதிர்த்து பேசுவது என்பது பெரிய விஷயமாக இருந்தது. அந்த அளவுக்கு சட்டமன்றத்தில் தன்னுடைய அழுத்தத்தைச் எடுத்துச் சொல்லக் கூடியவர்.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் சட்டமன்றத்தில் சிம்ம சொப்பனமாக விளங்கியவர்!

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆரின் ஆட்சி நடைபெற்றபோது, அந்த ஆட்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அண்ணன் துரைமுருகன், க.சுப்பு, ரகுமான்கான் ஆகிய இந்த மூன்று பேரும் தான் அன்றைக்கு சிம்ம சொப்பனமாக சட்டமன்றத்தில் விளங்கினார்கள். அந்தக் காரணத்தால், அன்றைக்கு இருந்த எம்.ஜி.ஆர். அவர்களின் அ.தி.மு.க. ஆட்சி அவர் மீது நடவடிக்கை எடுத்து, சட்டமன்றத்திற்கு வரக்கூடாது என்று சொல்லி ஒரு தண்டனை கொடுத்தார்கள்.

இன்றைக்கும் தமிழ்நாட்டின் தெருக்களில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

அவர் பிறந்த சொந்த ஊரான காங்குப்பத்தில் கருப்பு சட்டையை அன்றைக்கு இருந்த காங்கிரஸ் கட்சிக்காரர்கள் எரித்தார்கள். அதை எதிர்த்து போரிட்டவர் அண்ணன் துரைமுருகன் அவர்கள். அப்போது அன்னை சத்திய வாணி முத்து அவர்களை அழைத்து வந்து, அந்த காங்குப்பத்தில் ஒரு கிளைக் கழகத்தை தொடங்கி வைத்தார்கள். 16 வயதில் கிளைக்கழகத்தின் செயலாளராக இருந்து, படிப்படியாக உயர்ந்து

16 - வயதில் கிளைக்கழகச் செயலாளர்! இன்று கழகத்தின் பொதுச்செயலாளர்!



அவர் பிறந்த சொந்த ஊரான காங்குப்பத்தில் கருப்பு சட்டையை அன்றைக்கு இருந்த காங்கிரஸ் கட்சிக்காரர்கள் எரித்தார்கள். அதை எதிர்த்து போரிட்டவர் அண்ணன் துரைமுருகன் அவர்கள். அப்போது அன்னை சத்தியவாணி முத்து அவர்களை அழைத்து வந்து, அந்த காங்குப்பத்தில் ஒரு கிளைக் கழகத்தை தொடங்கி வைத்தார்கள். 16 வயதில் கிளைக்கழகத்தின் செயலாளராக இருந்து, படிப்படியாக உயர்ந்து வளர்ந்து, இன்றைக்கு ஒரு மாபெரும் இயக்கத்தின் கழகப் பொதுச்செயலாளராக மிகப்பெரிய பொறுப்பில், அவர் இருந்து கொண்டிருக்கிறார்.

அப்போது தலைவர் கலைஞர் அவர்கள் அந்தத் தண்டனையை கழகத்தின் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தி, 'இடி – மின்னல் – மழை' என்ற தலைப்பைப் போட்டு, தமிழ்நாடு முழுவதும் சுற்றிவர சொன்னார்கள். 'மின்னல்' என்ற தலைப்பில் அண்ணன் துரைமுருகன் அவர்கள் பேசிய பேச்சுக்கள் எல்லாம் வளர்ந்து, இன்றைக்கு ஒரு மாபெரும் இயக்கத்தின் கழகப் பொதுச்செயலாளராக மிகப்பெரிய பொறுப்பில், அவர் இருந்து கொண்டிருக்கிறார்.

பெருமையோடு சொல்ல வேண்டும் என்றால், பொதுவாழ்வில் ஒருவர்

தொடர்ச்சி 2ஆம் பக்கம்